


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு:- தை 2002

பதிப்புரிமை:- ஆசிரியருக்கே

பிரதிகள்:- 1000

நூலாசிரியர்:- மலர் சின்னையா (J.P)
Lecturer (Teacher's College Kopay)
Sp. Trained; (Social Studies) B.A Dip. in. Edu.
Dip. in School Management, S.L.P.S – I S.L.E.A.S - III


நூலுக்கான படங்கள்:- ம. டொமினிக் ஜீவா
சித்திரப் பிரிவு மாணவன்
(கோ / ஆசிரியர் கலாசாலை)

பதிப்பு:- கங்கை ஒவ்செற் பிறிண்டேர்ஸ்
186/1 நாவலர் றோட் (பிறவுண் வீதிக்கு அருகாமையில்) யாழ்.

விலை:- 80/-
(பாடசாலைகள் நேரடிக்கொள்வனவிற்கு விலைச் சலுகை உண்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை



எனக்கு எழுத்தறிவித்துக் கல்விக்கு அத்திவாரம் இட்ட,
இறைவன் போன்ற என் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும்,
ஏணிப்படிகளாய் இருந்து பள்ளிப்படிப்புவரை என்னை
வளர்த்த என் இனிய ஆசான்களுக்கும், உயர்கல்வியில்
அறிவூட்டிய என் மேன்மை மிகு ஆசான்களுக்கும்,
இந்நூலைக் காணிக்கை ஆக்கி நன்றி மல்கப்
பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

செம்பியின் செல்வி
(புனைபெயர்)
வரணி வடக்கு,
வரணி.

மலர் சின்னையா
நூலாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அறிகை ஆற்றல், எழுச்சி ஆற்றல், இயக்க ஆற்றல் முதலியவற்றைக் குழந்தைகளிடம் வளர்ப்பதற்குரிய பாடல் ஆக்கங்களைக் குழந்தை உளவியற் கண்ணோட்டத்தில் "மழலை எழுச்சி" என்னும் இந்நூலில் நூலாசிரியர் அமைத்துத் தந்துள்ளார். இசைவாக்கம், இணைந்த சமூக நடத்தைகள் (Prosocial Behaviour) இலட்சிய வடிவிலான அகத்தை வளர்த்தல், தமக்குரிய உளநிரற்கோலத்தை அமைத்தல், சமூகப் புலக்காட்சியை மலரச்செய்தல் முதலானவற்றை மேம்படுத்துவதற்குரிய பாடலாக்கங்கள் இந்நூலிலே காணப்படுகின்றன.

குழந்தைகள் தமது புலன் இயக்கச் செயற்பாடுகளில் ஆற்றல் பெறுதல், குறியீட்டு வடிவங்களை இனங்காணும் திறன்களைப் பெறுதல், விதிகளுக்கு இணங்கி விளையாடுதல் முதலாம் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பாடல்கள் உளவியல் நோக்கில் விதந்து குறிப்பிட்டுக் கூறப்படக் கூடியவை வைக்கோற்ஸ்கி (Vygotsky) என்ற உளவியலாளர் குழந்தைகளின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிப்படுத்தும் வலயத்தை உருவாக்குவதில் (Zone of potential Development) ஆசிரியர்கள் முன்னு - தாரணங்களாக விளங்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளார். அத்தகைய ஒரு கருத்தை உருவாக்கும் முயற்சியில் இந்நூலும் பங்கு கொள்ள முடியும்.

குழந்தைகள் தனித்திருந்து (Solitary actions) செயற்படவும், தமது வயதினருடன் இணைந்து சமாந்தரமாகச் செயற்படவும், இடைவினைகளுடன் செயற்படவும் இந்நூலாக்கம் துணை செய்வதாக அமையும்.

குழந்தை இலக்கியத்தையும், குழந்தை உளவியலையும், குழந்தைகளுக்காக கற்பித்தலியலையும் வளம்படுத்தும் மேலும் பல ஆக்கங்களை இந்நூலாசிரியர் மேற் கொள்வதற்குரிய வளமான பின்புலம் காணப்படுகிறது.

**சபா ஜெயராசா**
**கல்வியியற் பேராசிரியர்**
**யாழ். பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

"மழலை எழுச்சி" என்னும் இந்நூல் குழந்தைகளின் உள எழுச்சிகளுக்கும், உடல் எழுச்சிகளுக்கும் பயிற்சி கொடுக்கும் ஓர் பங்களிப்பைச் செய்யுமெனக் கருதுகின்றேன். குழந்தைகள் உடலும், உள்ளமும் இயல்பான தூக்க நிலையைத்தவிர வேறு எச்சந்தர்ப்பத்திலும் உறங்காது காண்பவற்றை புதுமையாக நோக்குவர். ஐம்புலன்களும் அவற்றுக்கு உந்து சக்தி கொடுக்கும். தேடலில் அவர்களின் புலன்கள் முனைப்புக்கொடுக்கும். அதனால் வினா எழுப்பிக்கொண்டு இருப்பர். சொல்பவற்றை அப்படியே கிரகிப்பர். அப்படியே பின்பற்றுவர். ஆதலால் அவர்களின் உடல் உளத் தேவைகளுக்கேற்ப பெற்றோரும், ஆசிரியரும் இருதேவைகளையும் நிறைவு செய்தல் வேண்டும். அவை காலதாமதப் படக் கூடாதவை என்பதும் குறிப்பிடத்தக்கது. கல்வி என்ற அத்திவாரம் இடப்படும் ஓர் குழந்தைக்கு இந்நூல் புதிய நட்பங்களைத் தாங்கி, புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கேற்ற ஓர் பங்களிப்பைச் செய்யுமென நம்புகின்றேன்.

இந்நூலின் கருப் பொருட்களுக்கேற்ற சிந்தனைச் சிதறல்களுக்கு வடிவம் கொடுத்த எமது ஆசிரிய கலாசாலை சித்திரப்பிரிவு மாணவன் ம. டொமினிக் ஜீவா வின் கைவண்ணத்தால் குழந்தைகள் மேலும் பயன் அடைவர்.

கல்வி அமைச்சின் கௌரவ செயலாளர்(தமிழ்) M.சமீல் அவர்கள் எனது கன்னிப்படைப்பான "எப்படிக்கற்போம்" என்ற நூலைப்பார்த்தபோது குழந்தை - களுக்கான பாடல் ஆக்கும்படி கேட்டுக்கொண்டதற் கிணங்கவும் அதே நூலைப் பார்த்த ஆசிரய மாணவியின் குழந்தை அபிராமி ரவிதரன் தாய் மூலம் தனக்கேற்ற குழந்தைப்பாடல்கள் ஆக்கித்தரும்படி கேட்டுக்கொண்டதற் கிணங்கவும் இந்நூலை ஆக்க முனைப்புப் பெற்றேன்.

இந்நூல் கைவரப் பெற்றவர்கள் அவற்றை வாசிக்கும் போது உங்கள் உள்ளம் சொல்பவற்றை என்னுடன் பகிர்ந்து கொள்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

**மலர் சின்னையா**
**விரிவுரையாளர்**
**கோ / ஆசிரியர் கலாசாலை**
**கோப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஆராரோ பாடுவோம் | 01 |
| அண்ணா தங்கை | 02 |
| பயண ஒலிகள் | 03 |
| நிலா | 04 |
| குருவிக் குஞ்சு | 05 |
| கும்பிடுவோம் | 06 |
| தம்பி | 07 |
| காலை வணக்கம் | 08 |
| அம்மா போன்ற ஆசிரியர் | 09 |
| நாயாரே | 10 |
| அப்பா | 11 |
| கப்பல் | 12 |
| அறிவோம் எழுத்தை | 13 |
| நான் ஆட வேண்டும் | 14 |
| கவனம் பாட்டி | 15 |
| கலை விழா | 16 |
| அழகு | 17 |
| உடற்பயிற்சி செய்வோம் | 18-19 |
| சேவலாரே நன்றி | 20 |
| தவளை | 21 |
| காக்கையாரே | 22 |
| பிள்ளையாரே | 23 |
| கும்மி அடிப்போம் | 24 |
| கிளியே | 25 |
| இலங்கை மாதா | 26 |
| கோயிலுக்குப் புறப்பட்டேன் | 27 |
| பூவே | 28 |
| ஏன் | 29 |
| பந்து | 30 |
| மீன் பிடிப்போம் | 31 |
| மழை | 32 |
| எழுத்து ஒலிகள் ஒலிப்போம் | 33-34 |
| வணக்கம் ஆசிரியருக்கு | 35 |
| பிறந்த நாள் | 36 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆராரோ பாடுவோம்



ஆராரோ பாட வேண்டும்
அம்மா போலப் பாடவேண்டும்
ஆரா ஆரோ ஆரிவரோ
ஆரா ஆரோ ஆரிவரோ.

கண்ணே என் கற்கண்டே
கண் துயில்வாய் கண்மணியே
தாலாட்ட நான் இருக்கேன்
நிம்மதியாகத் தூங்கு கண்ணே.

(ஆரா)



மாமாவும் அடிக்கவில்லை
மாமியும் பேசவில்லை
அண்ணாவும்அடிக்கவில்லை
அக்காவும் பேசவில்லை

(ஆரா)

தூக்கம் வந்து அழுகிறாயோ
தூக்கம் கொள்வாய் என் அமுதே
சத்தம் கேட்க விடமாட்டேன்
நிம்மதி கொண்டுதூங்கு கண்ணே

(ஆரா) - 2

'குழந்தை எதையும் உற்று நோக்கிச் செயல்படுவான்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா தங்கை

தங்கையே தங்கையே
வந்து விட்டேன் -(2)
உழைத்துக் கொண்டு
வந்து விட்டேன் -(2)

களைத்துப் போனாய்
இரு அண்ணா
அடுப்பில் சாதம்
ஆக்கித்தாரேன்

நீயும் களைத்துப்
போனாயே
வீட்டைப் பெருக்கியும்
இருக்கிறாயே

சாதம் இறக்கி
நான் தாரேன்
இனிதாய்ச் சாப்பிடு
என் தங்கையே.







'பாசமும் புரிந்துணர்வும் இளமையில் ஊட்டி விட்டால், வாழ்நாள் முழுவதும் அமைதி நிலவும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயண ஒலிகள்






மாட்டைப் பூட்டிப்
பயணம் செய்வோம்........
சடக் சடக் சடக்
சத்தம் கேட்டுக்
கொள்வோம். (2)


காரில் ஏறிப்
பயணம் செய்வோம்
பிறும் பிறும்
சத்தம் கேட்டிருப்போம்.

**மோட்டச் சயிக்கிலில்**
**ஏறிச் செல்வோம்**
**ப்றூம் ப்றூம் சத்தம்**
**கேட்டுச் செல்வோம்.**





**றெயிலில் ஏறி**
**அமர்ந்திடுவோம்**
**சுக்குப்பக்குச் சத்தம்**
**கேட்டு மகிழ்வோம்.**



பிளேனில் ஏறி
அமர்ந்திடுவோம்
ம் ......... ம்
ஒலியைக் கேட்டு
மகிழ்ந்திடுவோம்.

**எல்லாப் பயணமும்**
**சுகம் தருமே**
**விரைவாய்ச் செல்ல**
**துணையாகுமே.**

"உண்மை ஒலிகளில் கேட்டல் உச்சம் பெறும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலா

நிலவே நிலவே
வான் நிலவே - நீ
நீண்ட உயரத்தில்
ஏன் இருப்பான்.

பிறையாய் இருந்து
வளர்ந்தாயே - பின்
தேய்ந்து தேய்ந்து
செல்கிறாயே.

எங்கு சென்று
மறைந்தாயோ
எப்படி மீண்டும் வந்தாயோ.

தினமும் என்பக்கம்
நீ வருவாய்
எனக்காய்த் தினமும்
ஒளி தருவாய்.


இருளை நீக்கி
ஒளி தருவாய்
இன்பம் பொங்க
வந்திடுவாய்.



"கேள்வியை எழுப்புவதன் மூலம் சிந்தனையைத் தூண்டலாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவிக்குஞ்சு







குருவிக் குஞ்சைப்
பார்த்தோமே
கீச் கீச் கீச்

சிவந்தசொண்டைப்
பார்த்தோமே
கீச் கீச் கீச்
செட்டை எங்கே
தெரியவில்லை

தாயைக் கண்டு
மகிழ்ந்தன
கீச் கீச் கீச்
என்றன

தாயும் உணவைக்
கொடுக்கவே
குஞ்சும் வாயைத்
திறக்கவே
உணவும் சென்று
அடைந்ததே
பசியும் மாறிப் - (2)
போச்சுதே
கீச் கீச் கீச் - (4)
அம்மா போல
குருவித்தாயும்
உணவு கொடுத்து
மகிழ்ந்ததே - (2)
தாயும் குஞ்சை அணைக்கவே
குஞ்சும் தாயை அணுகவே
கீச் கீச் கீச் - (2)
சிரித்துச்சிரித்து மகிழ்ந்தன
இன்பம் கண்டு மகிழ்ந்தன.





"தொடராய் நிகழ்வுகளை நோக்கும் போது நிகழ்வு ஆளப்பதியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பிடுவோம்

கடவுளை அம்மா
கும்பிடவே
நானும் கடவுளைக்
கும்பிட்டேன்

கடவுள் எங்கே
என்றிடவே
சூரியனைக் காட்டி
நின்றாரே

ஒளியைத் தருவது
சூரியனே
மழையைத் தருவதும்
சூரியனே
உணவைத் தருவதும்
சூரியனே
எம்மை வளர்ப்பதும்
சூரியனே.


அனைத்தும் சூரியன்
தருவதனால்
அனைவரும் வணங்கிக்
கொள்வோமே.



"பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு உடன் பதிலை இனிதாய் அளியுங்கள். மனதில் அப்படியே பதியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி



சின்னச் சின்னத்
தம்பியே
சிரிக்கும் எங்கள்
தம்பியே
தத்தித்தத்தி
நடக்கிறாய்
தாவி எப்போ
ஓடுவாய்



கையைப் பிடித்துக்
கொள்ளு நீ
காட்டித் தாரன்
ஓடு நீ
எட்டி நீ
உதைக்காதே
அண்ணன் உனக்கு
மூத்தவன்



அண்ணன் தம்பியை
வளர்ப்பேனே
அன்பாய் வழியைக்
காட்டுவேனே
உற்ற துணையாய்
நான் இருப்பேன்
நம்பிக்கை வைத்து
நட தம்பி

"மூத்தோரதும், இளையோரதும் கடமைகள் சிறு பராயத்திலேயே ஊட்டப்படவேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலை வணக்கம்

வணக்கம் வணக்கம்
அம்மாவே
காலை வணக்கம்
அம்மாவே.

வணக்கம் வணக்கம்
அப்பாவே
காலை வணக்கம்
அப்பாவே.

வணக்கம் அண்ணா
அக்காவே
வணக்கம் தம்பி
தங்கையே.

இன்முகத்தால்
பாருங்கள்
இனிதாய் வணக்கம்
சொல்லுங்கள்.

மகிழ்ச்சி பொங்குது
காலையிலே
மகிழ்வாய் இருப்போம்
நாள் முழுதும்.



"கண்விளித்ததும் வணக்கம் சொல்லும் பண்பு உள்ளங்களை இதமாக்கும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா போன்ற ஆசிரியர்

அம்மா எந்தன் அம்மாவே
அணைத்து எடுக்கும் அம்மாவே

பள்ளிக்குப் போ
என்கிறாயே
எப்படிப் போவேன்
சொல்லம்மா

பள்ளி ஆசான்
நல்லவரே
தாயினும் மேலாய்
அரவணைப் பார்

அச்சத்தை விட்டுப்
போ மகனே
அறியாமை போக்கி
வா மகனே

அம்மா போன்ற
ஆசானோ
அன்பாய் என்னுடன்
பேசுவாரோ

அச்சம் விட்டுப்
போறேனம்மா
அறியாமை போக்கி
வாறேன் அம்மா



"அச்சத்தை போக்குவதன் மூலம் குழந்தை எழுச்சி பெறுவான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயாரே


வள் வள் வள்
நாயாரே
வாலை ஆட்டும்
நாயாரே.

என்னைப் பார்த்துச்
சிரிக்கின்றாய்
வீட்டைக் காத்துக்
கொள்கின்றாய்.

நன்றியுள்ள மிருகமே
நான் உனக்கு
நண்பனே
என்னைக்காத்துக்
கொள்ள நீ
உன்னைக் காத்துக்
கொள்வேனே

நீயும் என்னுடன்
பேசினால்
எப்படி இருக்கும்
எம் உறவு

வீட்டைக்காத்துக்
கொள்வாய் நீ
உழைத்து வருவேன்
உண்பதற்காய்



"ஒருவர் ஒருவரில் தங்கியிருக்கிறோம் என்ற எண்ணக்கருவை விதைத்துவிட்டால் மதிக்கும் மனப்பாங்கை ஏற்படுத்தலாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா







அப்பா எந்தன்
அப்பாவே
எனக்காய் வாழும்
அப்பாவே.

பள்ளியில் படிப்பேன்
பாடங்கள்
பட்டங்கள் பெறுவேன்
உங்களுக்காய்

பட்ட கஷ்டம்
போக்கிடுவேன்
பார் புகழ்
தந்தை ஆக்கிடுவேன்

நானும் உயர்ந்து
நிற்கையிலே
நிழலாய் உங்களைக்
காத்திடுவேன்.




"தந்தை மகனுக்கு ஆற்றுவது முதற்கடன்
மகன் தந்தைக்கு ஆற்றுவதும் முதற்கடனே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல்



கப்பல் ஒன்று
வருகுது
கடலின் மேல்
வருகுது.



நீந்தி நீந்தி
வருகுது
ஆடி அசைந்து
வருகுது.

புக்கு புக்கு
கேட்குது
புகைத்துக்கொண்டு
வருகுது

பொருட்கள் ஏற்றி
வருகுது
நிலத்தை நோக்கி
வருகுது

மக்கள் பயணக்
கப்பலும்
பண்டம் ஏற்றும்
கப்பலும்

போர் புரியும் கப்பலும்
மீன் பிடிக்கும் கப்பலும்
எத்தனை எத்தனை
எத்தனை எத்தனையோ

"எடுக்கும் விடயங்களைக் கற்றல் பயன்பாடுடன் கற்பியுங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவோம் எழுத்தை


எழுத்தை எழுத்தை
அறிவோமோ
எழுத்தில் வடிவம்
பார்ப்போமோ

அ,ஆ எழுத்தைப்
பார்த்திடுவோம்
க,கா எழுத்தைப்
பார்த்திடுவோம்

பார்த்தபடி எழுதிடுவோம் - 2
எழுதிய எழுத்தை
வாசிப்போம் - 2
வாசித்த எழுத்தை எழுதுவோம் - 2

ஒன்று இரண்டையும்
பார்த்திடுவோம்
பார்த்தபடி
எழுதிடுவோம்

எண்ணும் எழுத்தும்
தெரிந்துவிட்டால்
கற்றுக் கொள்வது
சுகமாகும்.




"கற்குமுன் விடையத்தை இலகுவாக்குங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஆட வேண்டும்



தாதெய் தாதெய்
தாதெய் தாதெய் - 2

டும் டும் டும் டும்
மேளமே
பீப் பீப் பீப் பீப்
குழலே

ங்ங்ங் ங்ங்ங்
வீணையே
சல் சல் சல் சல்
சலங்கையே

ஆடி அசைய
விரும்புகிறேன்
இசையை
இசையுங்கள் எனக்காக

தாதெய் தக்கத்தும்
தாதெய் தக்கத்தும் -2

உள்ளமும் துள்ளுது
உடலும் குலுங்குது
காலும் அடிக்குது
கையும் அசையுது

இசையும் ஒலிக்குது
இன்பம் பொங்குது
ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்தமே -4

தாதெய் தக்கத்தும்
தாதெய் தக்கத்தும் -2

"அசைவும் இசைவும் குழந்தையிடம் எழுச்சியை உருவாக்கும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனம் பாட்டி

பாட்டி கையில் வடை ஒன்றை
பதுங்கி இருந்த காக்கையார்
பறித்துக் கொண்டு செல்லவே
பாட்டி பதறிப் போனாரே
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ -2

என்ன பாட்டி ஏது பாட்டி
வடையைக் கையில் வைத்தீரோ
காகம் பறித்துச் சென்றதோ
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ -2



என்ன செய்வேன்
ஏது செய்வேன்
வயதும் போட்டுது
வடையும் போட்டுது
வருமுன் காக்கும்
நினைவும் போட்டுது
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ -2
சின்னப் பிள்ளைகள் நீங்களும்
வருமுன் காத்துக்கொள்ளுங்கோ -2

இளவயதில் படியுங்கோ
இன்பம் அதுதான் அறியுங்கோ
முதுமை வந்தால் போய்விடும்
வடையைப் போலப் போய்விடும்



"கற்றல் படிப்பினையைக் கூறவேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவிழா



கலைவிழா கலைவிழா வாருங்கோ
கண் கொள்ளாக் காட்சி பாருங்கோ

குரங்கார் வந்து ஆடுகின்றார்
காவடி வைத்து ஆடுகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலார் வந்து ஆடுகின்றார்
தோகை விரித்து ஆடுகின்றார்
நரியார் வந்து பார்க்கின்றார்
கூட்டம் போதாது என்கின்றார்

ஊரை அழைக்கத்துணிந்த அவர்
ஊ ஊ சத்தம் போடுகிறார் -2
கேட்ட ஊரார் திரண்டனரே
மேடையருகே திரண்டனரே

கோழியும் வந்து கொக் கொக் என்றிட
கிளியார் வந்து கி கி என்றிட
குருவி வந்து கீச்கீச் என்றிட
தவளையார் வந்து தடாம் தடாம் போட்டிட
குயிலார் வந்து பாடுகிறார்
இசையில் மயங்கிப் பாடுகிறார் -2
ஆட்டமும் ஆட பாட்டும் சேர
மாடுகள் பார்த்து இரசித்தனவே
செவியை ஆட்டி இரசித்தனவே -2

'ஒன்று சேர்ந்த செயலால் ஒரு காரியத்தைச் செய்து முடிக்கலாம்"

# அழகு

அழகு அழகு அழகு
அனைத்து உயிரும் அழகு
இறைவன் படைப்பில் அழகு
இன்பம் காண அழகு

கறுப்புத் தம்பியும் அழகு
கறுத்த அப்பாவும் அழகு
கறுத்தப் பெண்ணும் அழகு
கறுத்த பாட்டியும் அழகு

தலையின் கறுப்பு அழகு - அது
இளமைத் தலைக்கு அழகு
வெள்ளைத் தலையும் அழகு - அது
முதுமைத் தலைக்கு அழகு

நிறத்தில் மட்டும் அழகோ - உடல்
அங்கம் எல்லாம் அழகு
குணத்தின் அழகே அழகு - அது
மனதை நிறைக்கும் அழகு

அழகு உணர்வு குழந்தைகளுக்கு இன்பம் அளிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சி செய்வோம்

உடற்பயிற்சி
செய்வோம்
உள்ளம் மகிழச்
செய்வோம்

கூடி நாங்கள்
செய்வோம்
குதூகலிக்கச்
செய்வோம்

தலை - 4 திசையும்
1 2 3 4 5 6 7 8
8 7 6 5 4 3 வகுப். தரி

கண் - மூடித்திறத்தல் / பக்கம் அசைத்தல்
1 2 3 4 5 6 7 8
8 7 6 5 4 3 வகுப். தரி

மூக்கு- i) அசைத்தல் எண்ணிக்கைக்கு
ii) ஒரு விரலால் ஒரு மூக்குத் துவாரத்தை மூடிமறு மூக்கால் மூச்சை உள்வாங்குதல் (எண்ணிக்கை ஆறுதலாக)
1 2 3 4 5 6 7 8
8 7 6 5 4 3 வகுப். தரி

காது - மூடித்திறத்தல்
1 2 3 4 5 6 7 8
8 7 6 5 4 3 வகுப். தரி

வாய் - தாடை எலும்புகள் - 4 பக்கமும் அசைவிற்கு உட்படுத்தல்
1 2 3 4 5 6 7 8
8 7 6 5 4 3 வகுப். தரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய் - கண்ணை மூடி } ஓம் என்னும் போது
- வாயை மூடி } மூச்சை உள்வாங்கி சாந்தி என்னும் போது மூச்சை வெளிவிடல்

ஓம் சாந்தி ஓம் சாந்தி
ஓம் சாந்தி ஓம் சாந்தி

உள்ளம் குளிருது பாரும்
உடல் நிமிருது பாரும்
கண் தெளியுது பாரும்
உணர்வு பிறக்குது பாரும்



"ரூசோ - இயற்கை முறையில் மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் ஐம்புலன்களே" கல்வியின் அடிப்படை" என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவலாரே! நன்றி



கொக்கரக் கூ கொக்கரக்கூ
கொக்கரக்கூ கொக்கரக்கூ
கொக்கரக்கூ சேவலே
கொக்கரக் கூ சேவலே

விடியும் முன்னே
எழும்பி விட்டாய் (கொக்)
கூவி என்னையும்
எழுப்பி விட்டாய் (கொக்)
நானும் எழும்பிப்
படித்து விட்டேன்
காலைக் கடனும்
முடித்து விட்டேன்

அம்மா அப்பாவை
வணங்கி விட்டேன்
பறவை ஒலியைக்
கேட்டு விட்டேன் (கொக்)
குயிலின் இசையை
இரசித்து விட்டேன்
சூரிய உதயம்
பார்த்து விட்டேன் (கொக்)
இன்பம் பொங்குது
என் மனசில் - (2)
நன்றிகள் உனக்கே
சேவலாரே - (2)

"அதிகாலையில் எழும்பும் பழக்கத்தால் உற்சாகம் பிறக்கும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவளை

தவளை ஒன்று வருகுது
தாவிக் குதித்துச் செல்லுது


தண்ணீர்க் குள்ளே குதிக்குது
நீந்தி நுழைந்து மூழ்குது

மேலே மிதந்து வருகுது
கையைக் காலைப் பரப்புது

நீரில் படுத்துக் கொள்ளுது
நிம்மதியாகத் தூங்குது

நீரில் எப்படி வாழுது
நிலத்திற்கு ஏன் தான் வருகுது

எம்மைப் போலக் குதிக்குதே
எம்மைப் போலப் பாயுதே



'உற்று நோக்கச் செய்வதன் மூலம்
சிந்தனைகள் விரிகின்றன''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கையாரே!

கா கா கா
காக்கையாரே
கறுப்பாய் இருப்பது
ஏன் எதற்கு

விழியில் கூட
வெள்ளையில்லை
பாதத்தில் கூட
மாற்றம் இல்லை



வெள்ளையைத்
தேடியும் தெரியவில்லை
ஏன் ஏன் ஏன்
சொல்வாயோ - 2



இறைவன் படைப்பு
அப்படியோ - அன்றிக்
கறுப்பை விருப்பி
ஏற்றாயோ

உன்னை எனக்குப் பிடிக்குமே
கறுப்பும் எனக்குப் பிடிக்குமே
கழிவு உணவை உண்ணாதே
தட்டிப் பறித்தும் உண்ணாதே

"எதையும் ஏற்று அனுசரித்துக் கொள்ளும் மனப்பாங்கைச் சிறுபராயத்தில் ஏற்படுத்தல் தலையாய கடன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையாரே

மூத்த கடவுளே
பிள்ளையாரே
வணங்கிப் பணிவேன்
பிள்ளையாரே

பொறுமையை எனக்குத்
தந்திடுவாய் - என்
பொல்லாக் குணங்களை
அகற்றிடுவாய்

பணிவை எனக்கு
ஊட்டிடுவாய் -
பண்பை எனக்கு
உணர்த்திடுவாய்

உண்மையை நாவில்
வைத்திடுவாய் - நான்
சுகமாய் வாழ
அருள் புரிவாய்

கற்க எனக்குத்
துணை நிற்பாய் - என்
பெற்றோர் மகிழும்படி
வளர்த்திடுவாய் (மூத்த)



"தெய்வ வணக்கம் நற்பண்புகளை உள்ளத்தில் வளர்க்க வழிப்படுத்த வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்மி அடிப்போம்

கும்மியடி கும்மியடி
கும்மியடி கும்மியடி


உடலும் குலுங்கக் கும்மியடி
உள்ளம் மிளிரக் கும்மியடி

கூடி ஆடிக் கும்மி அடி
குனிந்து வளைந்து கும்மியடி

இருவர் இருவர்
சேர்ந்து அடி
மாறி மாறிச்
சேர்ந்து அடி

சிரித்துச் சிரித்துப்
பார்த்து அடி
தலையும் கண்ணும்
அசைத்து அடி

மகிழ்ச்சி பொங்குது
எம் மனசில்
சேர்த்துச் சேர்த்து
விரைந்ததடி



"உள்ளத்தை உடல் அசைவுகள், இசைகள் மூலம் சமநிலைப்படுத்தலாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளியே

கிளியே! கிளியே!
வா கிளியே
வடிவாய் இருக்கிறாய்
வா கிளியே

சிவப்புச் சொண்டின் வடிவழகில்
சிவந்த வட்ட கழுத்தழகில்


பச்சை நிறத்து உடல் அழகில்
கீ கீ என்னும் ஒலி அழகில்

அசைந்து நடக்கும் நடையழகில்
அசந்து போனேன் உன் அழகில்
(கிளியே)

சொல்லித்தந்தால் சொல்வாயாம்
அக்கா என்று சொல்வாயாம்
நானும் சொல்லித் தருகின்றேன்
என்னுடன் பேச வாகிளியே

பறக்கும் வல்லமை எனக்கிருந்தால்
பறந்து வருவேன் உன்னிடத்தில்
கூட்டில் உன்னை அடைக்கமாட்டேன்
கொடுமைகள் ஏதும் செய்ய மாட்டேன்
(கிளியே)

நம்பி வாநீ என்னிடத்தில் - என்
நிலை உனக்குத் தெரியும் தானே
பழங்கள் தருவேன் வா கிளியே
இருவரும் உண்போம் வாகிளியே



"அழகுணர்வைப் பண்பாட்டுடன் இசைவுபடுத்தும் போது மேலாதிக்கங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மாதா

எங்கள் நாடு
இலங்கை நாடு
இனிதாய் வாழ
இனிய நாடு

சிங்களம் தமிழ்
என்னும்
இருமக்களை
இனிதாய்ப் பெற்றாள்
இலங்கை மாதா

பெற்றவள் மனதைப்
புரிந்து கொண்டு
ஒற்றுமையாக
வாழ்ந்திருப்போம்

எமக்குள் வேற்றுமை
வேண்டாமே
ஒரு தாய் பெற்ற
மக்களானோம் - 2

ஒன்றாய்ச் சேர்ந்து
உழைப்போமே
ஒருவரை ஒருவர்
பேணுவோமே



"வேற்றுமை காணா குழந்தைகளே இந் நாட்டின் உண்டியல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலுக்குப் புறப்பட்டேன்



இறைவனைத் தரிசிக்கச் சென்றேனே
கோயிலில் கண்டு மகிழ்ந்தேனே

அம்மா கையைப் பிடித்துக் கொண்டு
ஆவலோடு சென்றேனே - 2

வழியில் கண்ட பண்டங்களும்
வாஞ்சையான பொருட்களும்

கண்ணில் பட்டும் தெரியவில்லை
காதில் கேட்டும் கேட்கவில்லை
கோயிலுக்குள் சென்று விட்டேன் - 2
இருகரம் கூப்பி வணங்கி நின்றேன்

குறும்புகள் ஏதும் செய்யவில்லை
வாயால் ஏதும் பேசவில்லை

மனதால் இறைவனைக் கும்பிட்டேன்
மனதும் நிறைந்து புறப்பட்டேன்

'வழியைச் சரியாய்க் காட்டும் போது குழந்தை அதன்வழி நடக்கும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[redacted]

பூவே பூவே
பூத்து விட்டாய்
பார்த்ததும் நானும்
மலர்ந்து விட்டேன்

சூரியனைக் கண்டு
மலர்ந்தாயோ
பருவம் அடைந்து
மலர்ந்தாயோ

என்னைக் கவர
மலர்ந்தாயோ
மணத்தை வீசி
மயக்குகிறாயோ
(பூவே)



மாலையில் சேர்ப்பேன் உனக்காக
மலர்ந்து இருப்பாய் எனக்காக
மொட்டை விட்டே மலர் எடுப்பேன்
காலையில் மட்டும் மலர் எடுப்பேன்

வண்டிடல் மட்டும் விருப்பு உனக்கோ
மெதுவாய்த் தானே மலர் எடுப்பேன்
பூவை உடலும் மென்மையே
மெதுவாய்த்தானே தலையில் வைப்பேன்



"சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதன் மூலம் கூடிய அர்த்தங்களைப் புரிய வைக்கலாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்

காகம் கா கா
என்கிறது
கிளியும் கீ கீ
என்கிறது

ஏன் ஏன் ஏன்
ஏனேனோ - 2

குயிலும் கூ கூ என்கிறது
சேவலும் கொக்கரக்கோ என்கிறது

ஏன் ஏன் ஏன் ஏன்
ஏனேனோ - 2



மகிழ்ச்சி கொண்டு
சிரிக்கிறதோ?
சிரிக்க முடியாமல்
ஒலிக்கிறதோ? - 2
ஏன் ஏன் ஏன் ஏன்
ஏனேனோ - 2

துன்பம் வந்து அழுகிறதோ
அழமுடியாமல் ஒலிக்கிறதோ
மொழிதான் அதற்கு இல்லையோ
பேச அதற்குத் தெரியாதோ

ஏன் ஏன் ஏன் ஏன்
ஏனேனோ - 2

"ஆழ்ந்து சிந்திக்க நேரம்கொடு" நீண்ட நேரம் கற்பிப்பதிலும் பயன் அதிகம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்து



பந்து பந்து பந்து
இது பாடி அடிக்கும்
பந்து

நல்ல நல்ல பந்து
இது நாங்கள்
அடிக்கும் பந்து

அடிக்க அடிக்க
மிதக்குது
மிதந்து மிதந்து
பாயுது

அமத்த அமத்த நசியிது
காற்று உள்ளுக்குள் இருக்குது


இறப்பருக்குள் காற்று
இனிய பந்து ஆனது

கூடி ஆடி அடித்து
இன்பம் தேடிக் கொள்வோம் - 2
மாலை நேரம் மட்டும்
பந்து அடித்து மகிழ்வோம் - 2

" விளையாட்டும் கலையும் படிப்புடன் இணையும் போது" கற்பித்தலும் கற்றலும் துள்ளியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடிப்போம்



மீன் பிடிக்கப் போகிறோம் -4
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ -2
ஆ(க்) ஆ(க்) ஆ(க்) ஆ(க்) -2
சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு -2
சீலா மீனைப் பிடித்து விட்டோம் -2


ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ -2
சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு -2
ஒட்டி ஓரா பிடித்து விட்டோம் -2
ஆ ஆ ஆ ஆ இ இ இ இ -2
குடு குடு குடு குடு சடு குடு குடு -2
நெத்தலி பாலை பிடிச்சாச்சு
நிறையப்பையில் போட்டாச்சு -2
எட்டி ஓடும் மீனினத்தை
எட்டி வீசிப்பிடித்திடுவோம் -2
ஏலேலோ ஏலேலோ

சடுகுடு குடுகுடு குடு - 2
விளையும் நகரையும் பிடித்தாச்சு
விரும்பிய மீன்கள் பிடித்தாச்சு -2
போதும் இனிப் போதுமே

சந்தை நேரம் ஆச்சுதே -2
ஆகா ஆகா ஆகா ஆகா -2

வாங்க வாங்க வாங்க வாங்க -2
சின்ன மீனே சத்து
விலையும் தானே குறைவு
சத்து உடம்பில் சேரும்

வயிற்றுப் பசியும் தீரும்
வாங்க வாங்க வாங்க -2
இலங்கை சூழக் கடல்கள்
இயல்பாய் இருக்குது நதிகள்
வெட்டி வைத்த குளங்கள்
வளமாய் இருக்குது வாங்க



" மேடைக்காக நடிக்காமல் பயன்பெறவும் நடிக்க வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை



மழை மழை
மழை மழை
பொழியுது பார்
வையம் சிறக்கப்
பொழியுது பார்
வானில் இருந்து
பொழியுது பார்
நிலத்தில் விழுந்து
ஊறுது பார்
ஊறிய உடனே
ஓடுது பார் - 2
சரிவை நோக்கி
ஓடுது பார்

பள்ளம் சென்று
நிறையுது பார் - 2
பார்க்க அழகாய்
இருக்குது பார்
கப்பல் செய்து
விட்டுப் பார்
தானாய் ஓடும்
உற்றுப் பார்
காற்றும் குளிந்து
வீசுது பார்
உடம்பும் குளிர்ந்து
போகுது பார் - (மழை)

"இயற்கை நிகழ்வுகளை அவை நிகழும் போதே கற்றலுக்காகப் பயன் - படுத்துங்கள்" உபகரணங்களுக்காக அலையத்தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்து ஒலிகள் ஒலிப்போம்

தொகுதி I



| | | | |
|---|---|---|---|
| அக் | அக் | அக் | அக் |
| ஆக் | ஆக் | ஆக் | ஆக் |
| இங் | இங் | இங் | இங் |
| ஈங் | ஈங் | ஈங் | ஈங் |
| உச் | உச் | உச் | உச் |
| ஊச் | ஊச் | ஊச் | ஊச் |
| எஞ் | எஞ் | எஞ் | எஞ் |
| ஏஞ் | ஏஞ் | ஏஞ் | ஏஞ் |
| ஐட் | ஐட் | ஐட் | ஐட் |
| ஒண் | ஒண் | ஒண் | ஒண் |
| ஓண் | ஓண் | ஓண் | ஓண் |
| ஔத் | ஔத் | ஔத் | ஔத்-4 |

தொகுதி - II

| | | | |
|---|---|---|---|
| நந் | நந் | நந் | நந் |
| நாந் | நாந் | நாந் | நாந் |
| பிப் | பிப் | பிப் | பிப் |
| பீப் | பீப் | பீப் | பீப் |
| மும் | மும் | மும் | மும் |
| மூம் | மூம் | மூம் | மூம் |
| யெய் | யெய் | யெய் | யெய் |
| யேய் | யேய் | யேய் | யேய் |
| ரைய் | ரைய் | ரைய் | ரைய் |
| லொல் | லொல் | லொல் | லொல் |
| லோல் | லோல் | லோல் | லோல் |
| வௌவ் | வௌவ் | வௌவ் | வௌவ் - 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொகுதி – III**

| | | | |
|---|---|---|---|
| ழழ் | ழழ் | ழழ் | ழழ் |
| ளள் | ளள் | ளள் | ளள் |
| றற் | றற் | றற் | றற் |
| னன் | னன் | னன் | னன் |


| | | | |
|---|---|---|---|
| ண | ண | ண | ண |
| ந | ந | ந | ந |
| ன | ன | ன | ன |
| ர | ர | ர | ர |
| ற | ற | ற | ற |
| ல | ல | ல | ல |
| ழ | ழ | ழ | ழ |
| ள | ள | ள | ள |



"ஒலிகளே எழுத்து வடிவம் ஆனது" ஒலிகளை எழுப்பிக் கற்பிப்பதன் மூலம் குழந்தை விருப்போடு எழுத்தைக் கற்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்கம் ஆசிரியருக்கு



தெய்ய தெய்ய தெய்ய - 4
ஆசிரியர் வருகிறார் - 2

அன்பாய் அணைத்துப்
பாடம் சொல்லி
பண்போடு ஊட்ட
வருகிறார் - 2
தெய்ய தெய்ய தெய்ய - 2

வருகிறார் வருகிறார் வருகிறார் - 2
வணக்கம் வணக்கம் வணக்கம்
காலை வணக்கம் ஆசானே - 2

கும்பிட்டு வணங்கிப் பணிந்தோமே
அறிவை அள்ளித் தாருங்கள்
அகிலத்தில் நீந்தச் செய்யுங்கள்
ஏணிகள் நீங்கள் ஏற்றி விடுங்கள் (தெய்ய)

ஏணியில் உயர்ந்து நின்றாலும்
ஏறிய படிகளை மறக்க மாட்டோம்
எமக்காய் உழைத்த பாதங்களை - நாம்
என்றும் தொட்டுப் பணிந்து நிற்போம்.

"உள்ளத்தால் வணங்கும் மாணவனே ஆசிரியனின் சொத்து"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள்

சந்தோச நாளே -2
காணியில் உ தித்த
சந்தோச நாளே
பிறந்த நாளே -2
சந்தோச நாளே. -2



நன்றிக் கடனை
நினைக்க வேண்டும்
நலம் பெற வாழ
வாழ்த்த வேண்டும் -2
பிறக்கச் செய்த
அம்மாவிற்கும்
உழைத்து வளர்த்த
அப்பாவிற்கும்
வணக்கம் வணக்கம் - 2

கல்வி தரும்
ஆசானுக்கும்
கருணை காட்டும்
இறைவனுக்கும்
வணக்கம் வணக்கம் -2

அறிவால் நானும்
உயர வேணடும்
என்னால் வீடும்
சிறக்க வேண்டும்
நாட்டுககு நானும்
உழைக்க வேண்டும்
என்றே வாழ்த்துங்கள்
என்னையே -2
பரிசுப் பொருள்
பார்க்கவில்லை
உள்ளத்தால் வாழ்த்த
வாருங்களேன்
நண்பர்கள் கூடி
வாருங்கள்
நலம் பெற வாழ்த்திப்
பாடுங்கள்-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் படைப்புக்கள்

- "எப்படிக் கற்போம்" (ஆண்டு 3-5 வரை)
(ஆரம்பக் கல்வி மாணவருக்கான கற்றல், கற்பித்தல் உத்தி கொண்ட பாடல் தொகுதி புதிய கல்விச்சீர்திருத்தத்திற்கேற்ப ஆக்கப்பட்டது)

- 2ம் பதிப்பு வெளி வந்துள்ளது

- விலை : 80 ரூபா

- பாடசாலைகள் நேரடிக் கொள்வனவிற்கு விசேட கழிவுகள் உண்டு

- பரிசளிக்கும் போது ஓர் நூலைப் பரிசுப் பொருளாகக் கொடுப்பதன் மூலம் கல்விக்கு அனைவரும் பங்களிப்புச் செய்யலாம்.

## *நன்றிகள்*

- இந்நூல் வெளியீட்டுக்கு ஆதரவு நல்கி ஒத்தாசை புரிந்த நல்லை ஆதீன முதல்வருக்கும், ஞானக்குழந்தை பாலர் கல்விக் கழகத்தினருக்கும், அச்சுருவாக்கிய கங்கை ஓவ்செற் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும், சித்திர வடிவமைத்த ம.டொமினிக் ஜீவாவிற்கும் என் நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M. Silvolai

கங்கை பிறிண்டேர்ஸ் (ஒவ்செற்)
166/1 நாவலர் றோட், (பிறவுண் வீதிக்கு அருகாமையில்) யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org